# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.10.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 3919/B/2024**

திரு. S. செந்தில்குமார் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த
நீதிமன்ற வளாகம்,
திருசெங்கோடு ரோடு,
நாமக்கல் மாவட்டம்- 637003. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் 10.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

> **"இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் விசாரணை மேற்கொண்டு, அப்போதைய பொது தகவல் அலுவலர் / தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நாமக்கல் அவர்களால் கடந்த 16.04.2013, 04.01.2019 மற்றும் 05.02.2021 தேதிகளில் வழங்கப்பட்ட தகவல்கள் அடங்கிய ஆவணத்தின் உண்மை தன்மையை உறுதி செய்து, மனுதாரருக்கு தகவல் வழங்கும்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது) / மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.**
>
> **முரண்பாடான தகவல் வழங்கிய சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர்கள் / தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்கள், நாமக்கல் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க ஏன் பரிந்துரை செய்யக் கூடாது என்பதற்கு உரிய விளக்கத்தினை உத்திரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக ஆணையத்தில் அளிக்க உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."**

மேற்படி உத்தரவின்படி, **சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது) அவர்கள் மற்றும் பொது தகவல் அலுவலர்கள் / தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்கள், நாமக்கல்** ஆகியோர் ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அறிக்கையினை

சமர்ப்பிக்கவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து, பொது தகவல் அலுவலர் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது பொது தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், பொது தகவல் அலுவலரிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**இணைப்பு: காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice)**

**<u>வழக்கு எண். CP 3919/B/2024</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
   நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
   திருசெங்கோடு ரோடு,
   நாமக்கல் மாவட்டம்- 637003.

2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது),
   மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
   சென்னை.

3. மேல்முறையீட்டாளர்,
   Dr.S.செந்தில்குமார், த/பெ.K.சுப்ரமணியம்,
   பழைய எண். 3/25, புதிய எண். 3/46, பாரதி நகர்,
   ரிலையன்ஸ் அலுவலகம் அருகில்,
   மோகனூர் ரோடு,
   நாமக்கல்-637002.

Copy to: File. GP PC
100626

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**வழக்கு எண். CP/3919/B/2024**

## காரணம் கேட்கும் குறிப்பாணை

## (Show Cause Notice)

திரு. S. செந்தில்குமார் அவர்கள் தாக்கல் செய்திருந்த மேல்முறையீடு / புகார் மனு எண்.CP/3919/B/2024-இல் இவ்வாணையம் பிறப்பித்த உத்தரவின்படி **சம்மந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது) அவர்கள் மற்றும் பொது தகவல் அலுவலர் / தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல்** என்ற தாங்கள் பொதுத் தகவல் அலுவலர் என்ற முறையில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)-இன் கீழ் நடவடிக்கைக்கு உட்பட்டவர் என ஆணையம் கருதுவதாலும்,

சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)-இன் கீழ், தங்களுக்கான பணி விதிகளின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யவும் ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும்,

தாங்கள், தங்களின் மீது மேற்படியான பிரிவுகளின் கீழ் ஏன் நடவடிக்கை தொடர பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை அதற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை 30.06.2026 அன்றை தேதிக்குள் ஆணையத்திற்கு பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும்.

(த.பி.பா)

குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் விளக்கம் வரப்பெறவில்லை எனில், தாங்கள் விளக்கம் அளிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி, ஆவணங்களில் உள்ள விவரங்களின் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**/ ஆணையத்தின் ஆணைப்படி /**

**உதவிப்பதிவாளர்**

## பெறுநர்

1. பொது தகவல் அலுவலர்,

   தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,

   நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,

   திருசெங்கோடு ரோடு,

   நாமக்கல் மாவட்டம்- 637003.

2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் (பொது),

   மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,

   சென்னை-600104.

<u>குறிப்பு:</u>

தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவுகள் **20(1)** மற்றும் **20(2)**-இன்படி ஒரு பொதுத் தகவல் அலுவலரை கீழ்க்கண்ட நிகழ்வுகளில் நடவடிக்கைக்கு உட்படுத்தலாம்:

- தகவல் கோரும் விண்ணப்பத்தை பெற மறுத்தல்
- தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு **7(1)**-இன்படி குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் தகவல் தராதது
- தகவல் கோரும் வேண்டுகோளை தீய நோக்கத்துடன் மறுத்தல்
- தெரிந்தே தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பும் வகையிலான தகவலை அளித்தல்
- வேண்டுகோளுக்கு உட்பட்ட தகவல்களை அழித்தல்
- தகவல் தருவதை எவ்வகையிலேனும் தடுத்தல்